# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.125/2016

2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.3 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திருமதி. R. பானுபிரியா, Bench Clerk (Gr–III)/IC அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 27.10.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கண்ணன் (DW–2) | வயது | : | 57 /2025 |
| த/க பெயர் | : | திரு. குப்புசாமி | தொழில் | : | விவசயாம் |
| முகவரி | | ரெங்கநாதபுரம் | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) என்னிடம் வாதி ராஜேஸ்வரி எந்த காலத்திலும் எந்தவித ஒப்பந்தமும் தாவா சொத்து குறித்து ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆரம்பத்தில் திருக்குமரன் பெயரில் இருந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சொத்து குறித்து ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது அந்த சொத்து தொடர்பான மூல ஆவணங்களையும் வருவாய் துறை ஆவணங்களையும் சரிபார்த்து தான் ஒப்பந்தம் எழுதுவார்கள் என்றால் சரிதான். அதுபோல தாவா சொத்து சம்பந்தமாக எந்த வருவாய் ஆவணங்களையும் பார்த்தேனா என்றால் இல்லை.
2) வா.சா.ஆ.1 ஆவணமானது திருக்குமரன் பெயரிலுள்ள கிரய ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் இறந்த திருக்குமரன் எந்த காலத்திலும் எந்தவித ஒப்பந்தமும் தாவா சொத்து குறித்து ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். திருக்குமரன் 30.05.2010 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். இறந்த திருக்குமரன் தந்தை உயிருடன் இல்லை என்றால் சரிதான். திருக்குமரனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். திருக்குமரனின் தாயார் பெயர் தான் வாதி ராஜேஸ்வரி என்றால் சரிதான்.
3) வா.சா.ஆ.3 , வா.சா.ஆ.4 ஆவணங்களான சிட்டா, அடங்கல் ஆகியவை திருக்குமரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சொத்து சம்பந்தமாக எனக்கும் வாதி ராஜேஸ்வரிக்கும் 2016 ம் ஆண்டு பிரச்சனை நடந்தது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் ஜுலை 2016 ல் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்தேன் என்றால் சரியல்ல.

4) பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ–2 முதல் 6 வரையிலான ஆவணங்கள் எந்த புல எண்ணிற்காக கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான், பி.சா.ஆ–2 முதல் 6 வரையிலான ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்யவில்லை. இந்நாள் வரை தாவா சொத்தினை எனது பெயருக்கு பதிவு செய்து கொடுக்கவேண்டும் என்பதற்கான வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, மாவட்ட கண்காணிப்பு அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளேன்.
5) தாவா சொத்து சம்பந்தமாக எந்த தேதியில் முதல் முதலாக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் தமிழரசன் என்பவரிடம் 19.07.2007 அன்று ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன். ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு எப்போது பேசி முடிவெடுக்கப்பட்டது என்றால் அதற்கு முதல் நாள் இரவு 6 – 7 மணியளவில் பேசி முடிவெடுக்கப்பட்டது. மறுநாள் காலை எப்போது ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் காலை 10 மணிக்கு ஒப்பந்தம் போடப்பட்டது. பத்திரம் எங்கு வாங்கப்பட்டது என்றால் மன்னார்குடியில் தமிழரசன் வாங்கினார். பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு முதல் நாள் பத்திரம் வாங்கபபட்டது.
6) இந்த ஒப்பந்தத்தை தவிர வேறு எந்தவித பேச்சு வார்த்தையும் வேறு சொத்துக்கள் தொடர்பாக இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக முதன் முதலில் 19.07.2007 இல் முதல் நாள் இரவு தான் பேசப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணமானது 16.07.2007 இல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரமானது எனது பெயரில் வாங்கப்பபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
7) நான் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 19.07.2007 இல் முதல் நாள் தாவா சொத்து சம்பந்தமாக முதன் முதலில் பேசப்பட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் 16.07.2007 இல் எனது பெயரில் தமிழரசன் பத்திரம் வாங்கவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ராஜேஸ்வரி வயதானவர் என்பதால் அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கட்சி நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இறந்த திருக்குமரனோ அல்லது ராஜேஸ்வரியோ தாவா சொத்து சம்பந்தமாக எந்தவித ஒப்பந்தமும் எனக்கு எழுதி கொடுக்காத சூழ்நிலையில் வேறு எந்த ஒப்பந்தமும் தாவா சொத்து சம்பந்தமாக வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.
8) உண்மையான உரிமையாளரான ராஜேஸ்வரியிடம் நான் தாவா சொத்தை சட்டப்படி ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.27 18:41:42 +0530

District Munsif

Mannargudi.